முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1453

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.09.2023**, வியாழக்கிழமை

1. ஞானபலம் கொண்ட அரங்கனே
ஞானிகள் துணைகொண்ட தேசிகனே
தானதர்மத்தின் மகாசக்தியே
தவராஜனே தணிகாசலன் என் அவதாரமே
2. அவதார ஞான வள்ளலே
அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
வகையாக ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 04 ம் நாள், 21.09.2023, வியாழக்கிழமை)
வழங்குவேன் அரங்கன் சக்தி இன்னும் பெருக
3. சக்திமிகு அரங்கனுக்கு இதுகாலம்
சாற்றிடுவேன் தேகசுத்தி செய்யும் வண்ணம்
அச்சமற தொடர்ந்து சூலவேளை உணவு
அவசியம் ஆற்றல் பெருக தருதல் வேணும்
4. வேண்டியே இதனோடு அரங்கன் விரும்புகின்ற
வினவிட சத்துபானங்கள் ஆகாரமும்
அச்சமற தொடர்ந்து வழங்கி கொண்டு
அறிவிப்பேன் அரங்கன் அறையில் ஐயமற
5. ஆறுமுகன் என் ஜெபதப ஒலி கேட்க வேண்டும்
வகைபட இதனோடு அரங்கன் நாமஜெபத்தை
வணங்கி தொண்டர் படைகள் பாராயணம் உச்சம் பெறும் வண்ணம்
உயர்வு பட தொடர்ந்து ஆற்றல்பட ஜெபதப ஒலிகள் முழங்க வேண்டும்
6. வேண்டி வேண்டி அரங்கன் திருவடி பற்றி
உலகோர் விடாது தர்மத்தை செய்துகொண்டே வந்தால்
அரங்கன் வந்த நோக்கம் பூர்த்தியாகும்
அவதார ஞானியரின் வழிவழியான

7. ஆற்றல்பட உலகெலாம் ஞானியர் படைபெருகி
அரங்கன் இந்த பிறவியின் நோக்கத்தை இலகுவாய் அடைந்து
உலகமாற்றமெனும் அதிசயம் நிகழ்த்தக்கூடும்
உண்மைபட ஞான ஆட்சியும் தரக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—